(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 46.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

2010, நவெம்பர் 11, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0042/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசுக்குச் சொந்தமான பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையையும்,

(ii) மாகாணம், மாவட்டம், தேர்தல் தொகுதி ஆகியவற்றைக் குறிப்பிடப்பட்டு அப்பல்கலைக்கழகங்களின் அமைவிடங்களையும்,

(iii) இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் செயற்படுகின்றனவா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அவற்றின் பெயர்கள் மற்றும் அவை ஒவ்வொனறிலும் பதிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும்,

(v) அவை உள்ளூர் பட்டங்களையா அல்லது வெளிநாட்டுப் பட்டங்களையா வழங்குகின்றன என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் கடந்த 6 வருடங்களுக்கான கல்வி நாட்கள் எத்தனை என்பதையும்,

(ii) கடந்த 6 வருடங்களில், வகுப்பு பகிஸ்கரிப்பு எதுவும் இன்றி தொழிற்பட்டிருந்தால், அவ்வாறு நடைபெற்ற நாட்களுடனான வருடவாரியான மேலே (i) இல் குறிப்பிட்டவாறு ஒரு ஒப்பீட்டையும்,

(iii) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் கடந்த 5 வருடங்களுக்கான பொதுவான மாணவர் வரவை வருட அடிப்படையில் எவ்வளவு என்பதையும்

பீடங்கள் அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) கடுமையான பகிடிவதைகளை கொடுத்ததாக அறிவிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) கடந்த இரண்டு வருடங்களில் இது தொடர்பாக நீதிமன்றத்தில் விசாரணை செய்து முடிவடைந்த மற்றும் எதிர்காலத்தில் விசாரிக்கப்படவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0053/ '10

2.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டம் மூலம் கூட்டிணைக்கப்பட்டு சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(ii) கம்பனிகள் பதிவாளரிடம் பதிவு செய்து சமூக சேவைகள் அல்லது ஆய்வுப் பணிகள் அல்லது பரிந்துரைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(iii) அவ்விதமான கம்பனிகள் தேவைப்படுத்தப்பட்டவாறு தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனவா, வரி தொடர்பான கோவைகளைப் பேணுகின்றனவா, அவற்றிற்கு கிடைக்கின்ற வருமானம் தொடர்பில் செலுத்த வேண்டியுள்ள வரிகளை செலுத்துகின்றனவா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 1999 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு என்பதையும், இந்நிதிகள் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அந்நிதிகளைப் பெற்றுக் கொண்ட நோக்கத்திற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஒப்புதல் அளித்ததா என்பதையும்,

(iii) இந்நிதி பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக ஏதாவது அரசாங்க முகவரினால் கண்காணிக்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0081/ '10

3.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அங்குணுகெலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் வக்கமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட தொரன சந்தியிலிருந்து வடிகாலமைப்புச் சபை வரையிலான வீதியின் 200 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0294/ '10

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்கு வரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 1991.08.25 ஆந் திகதி இ.போ.ச. மக்கள் மயப்படுத்தப்பட்டதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு வரை ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு முதல் நியமனத் திகதி தொடக்கம் பணிக்கொடை செலுத்துவதற்கு இ.போ.ச. கடமைப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) முதல் நியமனத் திகதி தொடக்கம் அவர்களுக்குப் பணிக் கொடை செலுத்த முடியாமலிருப்பதாகக் கூறி இ.போ.ச. நீதிமன்ற தீர்ப்பொன்றை கோரியிருந்ததா என்பதையும்,

(ii) அந்த நீதிமன்றத் தீர்ப்பு என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தொழில் ஆணையாளரினால் அந்த ஓய்வு பெற்றோருக்கு பணிக்கொடை செலுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், ஓய்வு பெற்ற ஊழியர்கள் எத்தனை பேருக்கு என்பதையும்,

(iii) செலுத்தவிருக்கும் மொத்த தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அந்த ஓய்வு பெற்றோருக்கு பணிக்கொடை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) அந்தப் பணத்தைத் துரிதமாகச் செலுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0342/ '10

5.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 'ஜி.எஸ்.பி.ப்ளஸ்' சலுகையின் கீழ் எமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்தி வகைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி உற்பத்திகள் ஏற்பறுமதி செய்யப்படும் நாடுகள் யாவையென்பதையும்,

(iii) உற்பத்திகளை அனுப்பும் போது வழங்கப்பட்ட வரிச்சலுகை எவ்வளவென்பதையும்,

(iv) இச்சலுகை நீக்கப்பட்டால் இழக்கப்படு தொழில்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(v) இக்காரணத்தால் இழக்கப்படும் தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரசு அந்நிய செலாவணிக்காக எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்பதையும்,

(ii) ஜி.எஸ்.பி.ப்ளஸ் சலுகையை தாரத ஐரோப்பிய நாடுகளுக்கு உற்பத்திகளை அனுப்பும் போது ஏற்படும் நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0531/ '10

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அக்கரைப்பற்று - மட்டக்களப்பு - திருக்கொண்டியாடுமடு வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதியையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0566/ '10

7.

கௌரவ புத்திக பத்திரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை மனிதவள அபிவிருத்தி வங்கிச் சங்கத்தின் அனைத்துக் கிளைகளும் தற்போது ஒழிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வங்கிக்கு உரியதாயிருந்த கிளைகள் எத்தனை என்பதையும்,

(ii) வைப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் வைப்பிலிடப்பட்டிருந்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வைப்புத் தொகைகளை மீளளிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் இடைக்காலக் குழுவொன்று நியமிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், இந்த இடைக்காலக் குழுவின் பெறுபேறுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) குறிப்பிட்ட வங்கியில் வைப்பாளர்களுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய முழுத் தொகை யாதென்பதையும்,

(ii) இத்தொகையை மீண்டும் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) இன்றேல், இத்தொகைகளை செலுத்தி முடிக்கும் இறுதித் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0573/ ‘10

8.

கௌரவ றஊப் ஹகீம்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு திசெம்பர் 26ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி பேரழிவினால் தமது பெற்றோர் மரணமடைந்ததன் காரணமாக அல்லது காணாமற்போனதன் காரணமாக அநாதைகளான பிள்ளைகளில், அரசாங்க மற்றும் தனியார் சிறுவர் இல்லங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) அப்போது, அப்பிள்ளைகளின் வயது மற்றும் அவர்களது பெயர் அல்லது பின்னர் அவர்களை அடையாளம் காணும் பொருட்டு சிறுவர் இல்லத்தினால் சூட்டப்பட்ட பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு பிள்ளையையும் அரச நன்னடத்தை இல்லத்தில் ஒப்படைப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள் அல்லது நபர்கள் யாவர் என்பதையும்,

(iv) தற்போது அப்பிள்ளைகள் தங்கவைக்கப்பட்டுள்ள அரசாங்க அல்லது தனியார் சிறுவர் இல்லங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிள்ளைகளில், தற்போது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் இனங்காணப்பட்டு, அவர்களது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட திகதி, முன்வந்த பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களின் பெயர், முகவரி மற்றும் மேற்படி ஒப்படைப்பை மேற்கொண்ட நீதிமன்றம் யாதென்பதையும்

மாவட்ட ரீதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0047/ '10

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உலக சந்தையில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 ஜனவரி முதல் இற்றை வரையிலான காலப்பகுதியில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலைத்தளம்பலைடந்த விதத்தையும்,

(ii) இந் நாட்டிற்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு விற்கப்படும் ஒரு லீற்றர் டீசலின் விற்பனை விலையையும், அதே டீசல் உள்நாட்டு நுகர்வோருக்கு விற்கப்படும் விலையையும்,

(iii) விமானங்களுக்கு விற்கப்படும் எரிபொருளின் விலையையும்,

(iv) உள்நாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு விற்கப்படும் ஒரு லீற்றர் டீசலின் விற்பனை விலையையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) வெளிநாட்டுக் கப்பல்களுக்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் சலுகை, உள்நாட்டு மீன்பிடிக்கலன்களுக்கு ஏன் வழங்கப்படுவதில்லை என்பதற்கான காரணத்தை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0335/ '10

10.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தல் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில் சூரியவெவ நபடகஸ்வெவ, 'பிறியஷானி' முகவரியில் வசிக்கும் திருமதி எஸ். ஜீ. குசுமாவதிக்கு வழங்கிய நபடகஸ்வெவ, மகஆர, யூடி06, 07 ஆம் இலக்க நீர்ப்பாசனக் காணி அதுவரையில் நிர்ணயம் செய்து கொடுக்கப்படவில்லை என்பதையும்,

(ii) இவருடைய கணவர் காட்டு யானை தாக்கியதால் மரணமடைந்துள்ளார் என்பதோடு இவர் பல கஷ்டங்களுக்கும் மத்தியில் தனது 4 பிள்ளைகளையும் போஷிக்கிறார் என்பதையும்,

(iii) திருமதி குசுமாவதியின் 7 ஆம் இலக்கக் காணியினை வேறொரு நபர் அத்துமீறிக் கைப்பற்றி உள்ளார் என்பதோடு அதற்கு மேலதிகமாக, மேற்படி நபர் யூடி 08 எனும் இன்னொரு காணியையும் கைப்பற்றி உள்ளார் என்பதையும்,

(iv) இக்காணியினை நிர்ணயம் செய்து கொள்ளும் பொருட்டு திருமதி குசுமாவதி மயுரபுர காணிக் காரியாலயத்துக்குச் சென்று தனது கோரிக்கைகளை முன்வைத்து உள்ளார் என்பதையும்,

(v) அது தொடர்பில் உத்தியோகத்தர்கள் இதுவரையில் கவனம் செலுத்தவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திருமதி குசுமாவதிக்கு கிடைத்துள்ள 07 ஆம் இலக்கக் காணியின் நிர்ணய உரிமையினை, இவருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) இன்றேல், இதன்பொருட்டு வேறொரு காணி இவருக்கு வழங்கப்படுமா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0532/ '10

11\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அம்பிலாந்துறை - வீரமுனை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0048/ '10

12\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல்கொத்மலை நீர் மின்சக்தி கருத்திட்டம் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் திகதியையும்,

(ii) இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை மற்றும் இன்றுள்ளவாறான செலவுத்தொகை ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(iii) இக்கருத்திட்டத்திற்கான நிதி எந்த நாட்டிலிருந்து அல்லது எந்த நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெறும் என்பதையும்,

(iv) கடன் வழங்கும் நிபந்தனைகளையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) பெறுமானத்தேய்வு உள்ளடங்களாக மின் அலகு ஒன்றிற்கான செலவை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0336/ '10

13.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத் திற்குட்பட்ட லுணுகம்வெஹெர கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படும் எம். ஆர். தாசிம் முஸ்லிம் வித்தியாலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இந்தப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆங்கில பாடத்திற்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்,

(ii) இப்பாடத்தை தொண்டர் அடிப்படையில் கற்பிப்பதற்கு மே வீதி, முகவரியில் வதியும் துவான் சல்பிகா அலி அவர்கள் செயலாற்றினார் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இவரது சேவையை மீண்டும் இப்பாடசாலைக்குப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், எத்திகதியிலிருந்து என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0533/ '10

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், சியம்பலான்டுவை - அம்பாறை - காரைதீவு வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2010 நவெம்பர் மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 24 ஆம் திகதி புதன்கிழமை, 25 ஆம் திகதி வியாழக்கிழமை, 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 27 ஆம் திகதி சனிக்கிழமை, 29 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1) ,— 70 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ( 2 011)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2010 நவெம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் நவெம்பர் மாதம் 27 ஆம் திகதி வரை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2) ,— 70 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ( 2011)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2010 நவெம்பர் மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.6.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

கௌரவ (வண) அதுரலிய ரதன தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"சமனலகிரி சதராங்க (நாடி) வைத்திய சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குனர்கள் அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, யூலை மாதம் 12 ஆம் திகதிய 1662/1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுத் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, யூன் மாதம் 17 ஆம் திகதிய 1658/31 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுத் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, ஓகத்து மாதம் 09 ஆம் திகதிய 1666/1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுத் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1670/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தித் தீர்வை வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, ஓகத்து மாதம் 30 ஆம் திகதிய 1669/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் கைத்தொழில், வாணிப அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, யூலை மாதம் 09 ஆம் திகதிய 1661/36 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— குறைநிரப்பும் தொகை - தலைப்பு 240, நிகழ்ச்சித் திட்டம் 2,— †2010 சனவரி மாதம் 1 ஆம் திகதியுடன் ஆரம்பமாகும் மற்றும் 2010 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டின் பயன்பாட்டிற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் ஏற்கனவே அனுமதித்துள்ள செலவின எல்லைகளை தாண்டாதவகையில், அதன் பல்வேறுபட்ட செலவினத் தலைப்புக்களின் கீழ் எதிர்பார்த்த மீதிகளை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு "வரவு செலவுத் திட்ட உதவி சேவைகள் மற்றும் அவசர தேவைகளின் பொறுப்புக்கள் பற்றிய செயற்றிட்டத்திற்கு" மாற்றிக் கொள்வதற்கும், 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) மற்றும் 6(2) ஆம் பிரிவுகளின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ள வெளிநாட்டு நிதியீட்டுடன் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கும் முன்னுரிமையளித்து குறைநிரப்பு ஏற்பாடுகளாக குறித்த அமைச்சுக்களுக்கு மாற்றுவதற்கு ஏற்ற வகையில், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசிற்குச் சொந்தமான வேறு யாதேனுமொரு நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் விருப்பத்திற்கேற்ப இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்தினால் நிதியீடு செய்யப்பட்ட பதினைந்து பில்லியன் ரூபா (ரூ.15,000,000,000) தொகைக்குக் கூடாத தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயார்படுத்திக்கொள்ளல் வேண்டுமென நிதி, திட்டமிடல் அமைச்சர் முன்மொழிகின்றார்.

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| தலைப்பு | 240 | - | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித் திட்டம் | 2 | - | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | |
| | | | மீண்டுவரும் செலவினம் | ரூ. 3,000,000,000 |
| | | | ஆக்கப் பொருட் செலவினம் | ரூ. 12,000,000,000 |
| | | | மொத்தச் செலவினம் | ரூ. 15,000,000,000 |
| | | | (பதினைந்து பில்லியன் ரூபா மட்டும்) | |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2010, நவெம்பர் மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2010 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

* 8.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

ஒதுக்கீடுச் சட்டமூலம் (2011) — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 17.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 18.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 19.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 20.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 21.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

22.

தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.